## தொழிலாளர் நீதிமன்றம், உதகமண்டலம்

C.P.No.23/2025 தொ.சா.1–திரு.B.B.ஜெயகுமார். நாள்: 16.07.2026

சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் நான் 1994 –ல் தினக்கூலியாக பணிக்கு சேர்ந்தேன். நான் அதன்பிறகு 18 ஆண்டுகள் தினக்கூலியாகவே இருந்தேன். 2014–ல் நான் ஆப்ரேட்டராக நியமிக்கப்பட்டேன். 2018 ஆம் ஆண்டில் நான் மாதம் ரூ. 28,000/–ம் அங்கு சம்பளம் பெற்று வந்தேன். 2018–ஆம் ஆண்டில் மாசு கட்டுபாட்டு வாரிய அதிகாரி அந்த தொழிற்சாலையில் பார்வையிட்டு ஆய்வு செய்த விவரம் எனக்கு தெரியும் என்பது சரி. அதன் பிறகு நிர்வாகம் 22.06.2018 தேதியிட்டு கடிதம் ஒன்றை மேற்படி மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அனுப்பி அதன் நிபந்தனைகளை நிறைவேற்ற கால அவகாசம் கோரி இருந்தது என்பது சரி. மாசு கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்திய Zero discharge plant என்பது தமிழ்நாடு உட்பட இந்தியாவின் எந்தவொரு மாநிலத்திலும் அமைக்கப்படவில்லை என்றால் தவறு. அவ்வாறு Plant அமைக்க எந்த அவகாசமும் நிர்வாகத்திற்கு வழங்காமல் மின்வாரியம் 28.06.2018 அன்று தொழிற்சாலை மின்இணைப்பு துண்டித்துவிட்டது என்றால் அவ்வாறு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்பது சரி, ஆனால் அந்த Plant அமைக்க நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 28.06.2018 அன்றே எதிர்மனுதாரர் நிர்வாகம் எந்தவொரு உற்பத்தி மேற்கொள்ளக்கூடாது என்று மாசு கட்டுப்பாட்டு வாரியமும் அந்த தொழிற்சாலைக்கு சீல் வைத்தது என்றால் இல்லை. 28.06.2018 முதல் எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் எந்தவொரு உற்பத்தியும்

B.B.ஜெயகுமார்
16/7/26

மேற்கொள்ளப்படவில்லை என்றால் நிர்வாகம் எந்தவொரு பணியும் தொழிலாளருக்கு அந்த தேதியில் இருந்து வழங்கவில்லை. மேற்படி தேதி முதல் தொழிலாளர்கள் எந்தவொரு பணியும் மேற்கொள்ளவில்லை என்றும் அலுவலகப் பணியாளர்கள் மட்டுமே பணி செய்து வந்தார்கள் என்றும் என் முதல் விசாரணைக்கான நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியாது. என் முதல் விசாரணைக்கான நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் எதிர்மனுதாரர் தொழிற்சாலைக்கு சீல் வைத்த பிறகும், மின்வாரியம் மின்இணைப்பு துண்டித்தபிறகும், தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதியத்தை நிர்வாகம் சட்டவிரோதமாக 50% சதவீதத்தை வழங்காமல் இருந்தது என்று குறிப்பிட்டுள்ளதை பொறுத்து தொழிற்தாவா எங்கள் சங்கத்தின் மூலம் எழுப்பினோமா என்றால் எழுப்பினோம்.

எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு தேவையான மூலப்பொருட்கள் இல்லை என்று குறிப்பிட்டோ அல்லது தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்குகிறது என்று குறிப்பிட்டோ எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிற்சாலை இயக்கத்தை நிறுத்தவில்லை. தொழிற்சாலை மின்இணைப்பு மொத்தமாக துண்டிக்கப்பட்டுவிட்டதாலும், மாசு கட்டுப்பாட்டு வாரியம் தொழிற்சாலைக்கு சீல் வைத்ததாலும் தான் எதிர்மனுதாரர் தொழிற்சாலை இயக்கப்பட முடியவில்லை என்றால் மின் இணைப்பு முழுவதுமாக துண்டிக்கப்படவில்லை, மாசு கட்டுப்பாட்டு வாரியமும் சீல் வைக்கவில்லை, Zero discharge Plant அமைக்கும் வரை உற்பத்தி செய்யக்கூடாது என்று மட்டுமே மாசு கட்டுப்பாட்டு வாரியம் நிறுத்தி வைத்திருந்தது.

B.K ஜெகதீசன்
16/7/24

எதிர்மனுதாரர் நிர்வாகம் தங்கள் தொழிற்சாலையை Closure செய்ய அனுமதிக்க வேண்டி அரசாங்கத்திற்கு 15.02.2024 அன்று விண்ணப்பத்தது என்பது சரிதான். அந்த விண்ணப்பத்தின் பேரில் உதவி தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் நடந்த விசாரணையில் நாங்கள் எங்கள் சங்கம் மூலமாக முன்னிலை ஆனோம் என்பது சரி. அது சம்பந்தமாக 09.09.2024 வரை எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு Closure –க்கு அனுமதி வழங்கியோ அல்லது அதை மறுத்தோ தமிழக அரசு எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் தவறு. தமிழக அரசு எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிற்சாலையை Closure செய்ய வேண்டியதை நிராகரித்து 09.09.2024 அன்று உத்தரவு பிறப்பித்தது என்பதும், அதன் நகல் எங்களுக்கும் கிடைத்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்பது சரி. 28.06.2018 முதலே தொழிற்சாலை இயங்காமல் இருந்து வருவதாக நிர்வாகம் அந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தது என்பது சரி, ஆனால் அதை தமிழக அரசு நிராகரித்துவிட்டது.

எங்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையில் ஊதிய நிர்ணயம் குறித்து எந்தவொரு ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்பது சரி. 2018–ஆம் ஆண்டு காலகட்டத்தில் அமலில் இருந்த போனஸ் சட்டத்தின்படி அப்பொழுது மாதம் ரூ.21,000/–த்திற்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்களுக்கு போனஸ் கிடையாது என்றால் தவறு, ரூ.21,000/–த்திற்கும் அதிகமாக மாதம் சம்பளம் பெற்றவர்களுக்கும் அப்பொழுது போனஸ் கொடுத்தார்கள். ஒரு கணக்கு ஆண்டில் குறைந்தது 30 நாட்கள் பணிபுரிந்து இருந்தால் தான் போனஸ் கிடைப்பதற்கான தகுதி ஏற்படும் என்பது சரி. 28.06.2018 தேதிக்கு பிறகு இன்றைய தேதி வரை எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் எந்தவொரு உற்பத்தி பணியும் மேற்கொள்ளப்படவில்லை என்பது சரி.

B. B. [signature]
16/7/24

அதன் காரணமாக எதிர்மனுதாரர் நிர்வாகம் மீது தேசிய கம்பெனிகள் தீர்ப்பாயத்தில் நொடிப்பு நிலை மனு ஒன்றை கடன் வழங்கிய வங்கிகள் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த மனு மீது ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரமும் எங்களுக்கு தெரியும் என்பது சரி. அந்த உத்தரவில் எதிர்மனுதாரர் நிர்வாகம் எவருக்கும் பணம் வழங்கக்கூடாது என்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்பது சரி.

28.06.2018 தேதியிலிருந்து நிர்வாகம் அதன் உற்பத்தியை நிறுத்திய விவரத்தையும், பணியாளர்களுக்கு வேலை வழங்க இயலவில்லை என்ற விவரத்தையும் உடனடியாக 12.07.2018 தேதியிலேயே அறிவிப்பு பலகையில் குறிப்பிட்டுவிட்டது என்றால் தவறு.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் உத்தரவு தமிழ்நாடு மின்வாரியத்தால் எதிர்மனுதாரரின் ஆலைக்கு வழங்கிவந்த மின்சாரத்தை துண்டித்தற்காக 28.06.2018–ல் பிறப்பித்த உத்தரவு என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் உத்தரவு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் எதிர்மனுதாரரின் ஆலைக்கு உற்பத்தி எதுவும் செய்யக்கூடாது என்று தெரிவித்து 28.06.2018–ல் பிறப்பித்த உத்தரவு என்றால் எனக்கு தெரியாது. 10.07.2018 அன்று நிர்வாகம் தற்போது என்னிடம்காண்பிக்கப்படும் அறிவிப்பு ஆலை வளாகத்தில் உள்ள நோட்டீஸ் போர்டில் தொழிற்சாலையை இயக்க முடியவில்லை என்றும் அதனால்வேலை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தது என்றால் இல்லை. 28.06.2018 முதல் இன்று வரை அந்த ஆலையில் நான் எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரி, நிர்வாகம் எனக்கு வேலை கொடுக்காததால் என்னால் வேலை செய்ய இயலவில்லை. அதனால் எதிர்மனுதாரர் நிர்வாகம் எனக்கு அங்கு

B.B. [signature]
16/12/24

வேலை வழங்க இயலவில்லை என்று தெரிவித்து பரோடாவில் உள்ள அவர்களது ஆலைக்கு 22.10.2024 தேதியில் என்னை பணிமாற்றம் செய்தார்கள் என்பது சரி. நான் அதனை ஏற்றுக்கொண்டு இன்று வரை அங்கு சென்று பணி ஏற்கவில்லை என்பது சரி, அது தவறான உத்தரவு என்பதால் நான் அதை ஏற்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். அந்த பணியிடமாறுதல் உத்தரவு தவறானது என்று நானோ, என் தொழிற்சங்கமோ நிர்வாகத்திற்கு கடிதம் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை, ஆனால் தொழிற்சங்கம் வழக்கு தாக்கல் செய்துள்ளது. தொழிற்சங்கம் இது சம்பந்தமாக தொழிலாளர் உதவி ஆணையரிடம் மனு தாக்கல் செய்துள்ளது. இதை தெரிவிக்கும் ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்பது சரி.

எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிற்தகராறு சட்டம் பிரிவு 25 (O) ன் படி அரசாங்கத்திற்கு ஆலை மூடுவது தொடர்பாக அனுமதி வேண்டி விண்ணப்பித்து அதன் அடிப்படையில் அரசாங்கம் 09.09.2024 தேதியிட்டு தற்போது என்னிடம் காட்டப்படும் ஆணையை பிறப்பித்தது என்றால் தவறு. இந்த உத்தரவை என்தரப்பில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்பது சரி. அதனை ஆட்சேபித்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. No work No Pay என்ற அடிப்படையில் எனக்கு நிர்வாகம் எந்த ஊதியமும் வழங்க கடமைப்பட்டது அல்ல என்றால் தவறு. அப்படியிருப்பினும் நிர்வாகம் எங்களுக்கு 2022 அக்டோபர் வரை50% ஊதியம் வழங்கிவந்தது என்பது சரி. நிர்வாகம் எந்த விதிகளையும் மீறவில்லை என்றும், அதனால் நிர்வாகம் எந்த தொகையும் எங்களுக்கு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றும் சொன்னால் தவறு.

B.B. ஜெயசீலன்
16-7-24

**மறுவிசாரணை** – இல்லை

B.B.ஜெயசீலா
16-7-24.

Taken down by me in open court read over./ interpreted to the witness and acknowledged by him/her to be correct.
16/7/24

Presiding Officer (FAC)
Labour Court
Udhagamandalam